தடைச்சுவரை உடைப்போம்

லிட்டில் ராக் ஒன்பது பேரின் போராட்டம்

எய்லீன் லூகாஸ் சித்திரங்கள் : மார்க் ஆண்டனி





தடைச்சுவரை உடைப்போம்

லிட்டில் ராக் ஒன்பது பேரின் போராட்டம்

எய்லீன் லூகாஸ்

சித்திரங்கள் : மார்க் ஆண்டனி

தமிழில் ; அருண்குமார் ஆண்டவன்

ஆசிரியரின் குறிப்பு

சமீப காலம் வரை, பல இடங்களில் உள்ள சட்டங்கள் கறுப்பின மற்றும் வெள்ளையின அமெரிக்கர்களைப் பிரித்து வைத்திருந்தன. இது "பிரிவினை" அல்லது "நிறவெறி" என்று அழைக்கப்பட்டது. காத்திருப்பு அறைகள், குடிநீர்க் குழாய்கள், பேருந்துகள் மற்றும் தங்கும் விடுதிகளில் "வெள்ளையர்களுக்கு மட்டும்" என்ற அறிவிப்புப் பலகைகள் வைக்கப்பட்டிருந்தன. "கறுப்பினத்தவருக்கு மட்டும்" என்ற அறிவிப்புப் பலகைகள் சிறிய, அசுத்தமான இடங்களில் மட்டுமே வைக்கப்பட்டிருந்தன. வெள்ளையினக் குழந்தைகளுக்கும் கறுப்பினக் குழந்தைகளுக்கும் தனித்தனிப் பள்ளிகள் இருந்தன. கறுப்பினக் குழந்தைகளின் பள்ளிகள் எப்போதுமே பழையதாகவும், சிறியவையாகவும் இருந்தன. வெள்ளையினப் பள்ளிகள் இனி விரும்பாத பாடப்புத்தகங்களையே கறுப்பினக் குழந்தைகள் பயன்படுத்த வேண்டியிருந்தது.

1954- ல், "இனப் பாகுபாடு" காரணமாகப் பள்ளிகளைப் பிரித்து வைப்பது தவறு என்று அமெரிக்க உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. குழந்தைகளின் தோல் நிறத்தின் காரணமாக மட்டுமே அவர்களைப் பிரித்து வைத்து, அவர்களுக்கான தரமான கல்வியை மறுக்கக்கூடாது என அறிவித்தது.

1957- ஆம் ஆண்டில், ஆர்கன்சாஸின் லிட்டில் ராக்கில் ஒன்பது கறுப்பின மாணவர்கள், பெரும்பாலும் வெள்ளையர்கள் பயிலும் சென்ட்ரல் உயர்நிலைப் பள்ளிக்குச் செல்ல தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்கள் "லிட்டில் ராக் ஒன்பது பேர்" என்று அறியப்பட்டனர். இது அவர்களின் கதை.



ஆர்கன்சாஸ் மாநிலத்தில், லிட்டில் ராக் நகரில் இருந்த ஓர் அமைதியான தெருவில் கார் ஒன்று மெதுவாகச் சென்றுகொண்டிருந்தது. .

ஓட்டுநர், அவர் தேடும் வீட்டைக் கண்டதும், காரின் வேகத்தைக் குறைத்தார்.

அது எல்.சி மற்றும் டெய்சி பேட்ஸ் ஆகியோரின் இல்லம்.

அவர்கள் நகரில் ஆப்பிரிக்க-அமெரிக்க செய்தித்தாள் நிறுவனம் ஒன்றின் உரிமையாளர்களாக இருந்தனர்.

திடீரென்று காருக்குள் இருந்த யாரோ ஒருவர் கல்லை எறிந்தார், அது பேட்ஸ் வீட்டின் முன்பக்க ஜன்னலை உடைத்துக்கொண்டு உள்ளே விழுந்தது.

கண்ணாடி நொறுங்கிய சத்தத்தைத் தொடர்ந்து, நாய்கள் குரைக்கத் தொடங்கின, குழந்தைகள் அழத் தொடங்கின.

காரில் இருந்த நபர்கள் சிரித்துக்கொண்டே வேகமாக அங்கிருந்து சென்றுவிட்டனர்.

ஆனால் வீட்டிற்குள் யாரும் சிரிக்கவில்லை.

சோபாவில் அமர்ந்திருந்த டெய்ஸி பேட்ஸின் மேல் கல்லானது கிட்டத்தட்ட பட்டுவிட்டது.

அவள் தரையில் சிதறிக்கிடந்த கண்ணாடித் துண்டுகளைப் பார்த்தாள்.

கல்லை எறிந்த நபர்கள் தன்னை அச்சுறுத்தவே இதைச் செய்திருக்கிறார்கள் என்பது அவளுக்குத் தெரியும்.


சென்ட்ரல் உயர்நிலைப் பள்ளிக்கு சென்றுகொண்டிருந்த கறுப்பின மாணவர்களுக்கு அவள் உதவுவதை தடுத்த நிறுத்த வேண்டும் என அவர்கள் விரும்பினார்கள்.

ஆனால் அவள் பயப்படவில்லை.

அவள் அந்த மாணவர்களுக்கு உதவி செய்யத்தான் போகிறாள் மற்றும் கருப்பு மற்றும் வெள்ளையின மக்களை பிரித்து வைத்திருக்கும் சட்டங்களுக்கு முடிவு கட்டத்தான் போகிறாள்.







சென்ட்ரல் ஹை ஒரு பிரம்மாண்டமான பள்ளிக்கூடம். அதன் பரப்பளவு ஒரு முழு நகரத்தின் பரப்பளவுக்குச் சமமாக இருந்தது.

அந்தப் பள்ளியில் ஐந்து மாடிகளில் வகுப்பறைகள் இருந்தன, மேலும் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயின்றனர்.

இப்போது, அந்த மாணவர்களில் ஒன்பது பேர் கறுப்பினத்தவர்கள்.

அவர்களில் ஒருவன் எர்னஸ்ட் கிரீன்.

இது அவனுடைய உயர்நிலைக் கல்வியின் கடைசி ஆண்டு.

அவன் சென்ட்ரல் ஹை பள்ளியில் தேர்ச்சி பெற்று கல்லூரிக்குச் செல்ல விரும்பினான்.



மற்ற ஆறு மாணவர்கள் பதினொன்றாம் வகுப்பில் பயின்றனர்.

மின்னீஜீன் பிரவுன் ஒரு வேடிக்கையான பெண். அவள் மற்றவர்களைச் சிரிக்க வைப்பதை விரும்புவாள்.

அவளுக்கு பாடுவதும் மிகவும் பிடிக்கும்.



டெரன்ஸ் ராபர்ட்ஸ் உற்சாகமான மற்றும் புத்திசாலியான மாணவனாக இருந்தான்.

அவன் எப்போதும் மக்களைச் சிரிக்க வைக்கும் விஷயங்களைச் சொல்வான்.

எலிசபெத் எக்ஃபோர்டுக்குத் தையல் மிகவும் பிடிக்கும்.

பள்ளி தொடங்குவதற்காகக் காத்திருந்த காலங்களில் அவள் தனக்கென ஒரு புதிய ஆடையைத் தைத்துக்கொண்டாள்.





தெல்மா மதர்ஷெட் உருவத்தில் சிறியவளாகவும், மெலிந்தவளாகவும், பலவீனமான இதயம் கொண்டவளாகவும் இருந்தாள்.

ஆனால் அவள் உறுதியான மனம் கொண்டிருந்தாள்.

குளோரியா ரே, தான் முக்கியமாக கருதும் விஷயங்களைப் பற்றி மெதுவாகப் பேசுவாள்.

மெல்பா பாட்டிலோ அழகியாகவும், பல விஷயங்களில் சிறந்தும் விளங்கினாள்.

சென்ட்ரல் பள்ளியில் தனக்காக 'ஐந்து மாடி வாய்ப்புகள்' காத்திருக்கின்றன என்பதை அவள் அறிந்திருந்தாள்.



ஜெபர்சன் தாமஸும், கார்லோட்டா வால்ஸும் பத்தாம் வகுப்பில் பயின்றனர்.

ஜெஃப் தனது முந்தைய பள்ளியில் மிக வேகமாக ஓடும் வீரர்களில் ஒருவனாக இருந்தான்.

கார்லோட்டா மாணவர் மன்றத்தில் இருந்தாள்.

ஒன்பது மாணவர்களும் நன்னடத்தை உள்ளவர்களாகவும், கடின உழைப்பாளிகளாகவும் இருந்தனர்.

அவர்கள் அனைவரும் சென்ட்ரல் உயர்நிலைப் பள்ளிக்குச் செல்வதில் மகிழ்ச்சியாக இருந்தனர்.

ஆனால், பள்ளியில் உள்ள அணிகளிலும், மன்றங்களிலும் சேர தங்களை அனுமதிக்க மாட்டார்கள் என்பது அவர்களுக்குத் தெரிந்திருந்தது.

மினிஜீனால் இசைக் குழுவில் பாட முடியாது.

ஜெஃப்பால் தடகள அணியில் சேர முடியாது.

எர்னஸ்ட்டால் இசைக்குழுவில் சாக்ஸஃபோனை வாசிக்க முடியாது.

கறுப்பின மாணவர்களால் வகுப்புகளுக்கு மட்டுமே செல்ல முடியும்.

"இருப்பினும் அதுவே ஒரு பெரிய விஷயம்," என்று எர்னஸ்ட் மற்றவர்களை ஊக்கப்படுத்தினான்.



தெற்கில் இருந்த பல வெள்ளையர்கள் இனப் பாகுபாடு முடிவுக்கு வருவதை விரும்பவில்லை.

அவர்கள் கறுப்பினக் குழந்தைகளை, வெள்ளையினக் குழந்தைகளுடன் பள்ளியில் இருப்பதை காண விரும்பவில்லை.

வெள்ளையர்களில் சிலர் இந்த விஷயம் குறித்து ஆர்கன்சாஸ் ஆளுநர் ஓர்வல் ஃபௌபஸுடன் விவாதிக்கச் சென்றனர்.



தொழிலாளர் தினத்தன்று, ஆளுநர் ஃபௌபஸ் வானொலி மற்றும் தொலைக்காட்சிகளில் உரையாற்றினார்.

சென்ட்ரல் உயர்நிலைப் பள்ளிக்கு வெளியே ராணுவ வீரர்கள் நிறுத்தப்படுவார்கள் என்று அவர் கூறினார், மேலும் கறுப்பின மாணவர்கள் சென்ட்ரல் உயர்நிலைப் பள்ளிக்குச் செல்லக் கூடாது என்றும் அவர் கூறினார்.

“இவர் பிரச்சினையின் தீவிரத்தை அதிகப்படுத்துகிறார்," என்று மெல்பாவின் பாட்டி கூறினார்.



மெல்பாவின் பாட்டி சொன்னது சரிதான்.

மறுநாள் காலையில் சென்ட்ரல் உயர்நிலைப் பள்ளிக்கு முன்னால் மக்கள் கூட்டம் கூடியது.

தலைக்கவசங்களை அணிந்து, துப்பாக்கிகளை ஏந்திய வீரர்கள் கட்டிடத்தைச் சுற்றி அமைதியாக நின்றிருந்தனர். பார்ப்பதற்கு அவர்கள் போருக்குத் தயாராக இருப்பது போல் தோன்றியது.

சென்ட்ரல் உயர்நிலைப் பள்ளியில் கலவரம் நடக்குமா?

அன்று சென்ட்ரல் ஹை பள்ளிக்கு வெள்ளையின மாணவர்கள் மட்டுமே வந்திருந்தனர்.

கறுப்பின மாணவர்கள் தங்கள் வீடுகளிலேயே இருந்துவிட்டனர். அவர்கள் பிரச்சினையை விரும்பவில்லை.

ஆனால் அவர்கள் நல்ல கல்வியை பெற விரும்பினர்.

மேலும் சென்ட்ரல் ஹை உயர்நிலைப் பள்ளியே தங்களுக்கான கல்விக்கூடமாக இருக்கும் எனக் கருதினர்.

அன்று பின்னிரவில், திருமதி பேட்ஸ் எலிசபெத்தைத் தவிர மற்ற எல்லா மாணவர்களையும் அழைத்தார்.

எலிசபெத்தின் குடும்பத்திடம் தொலைபேசி இருக்கவில்லை.

திருமதி பேட்ஸ் அடுத்தநாள் எலிசபெத்தை நேரில் சந்திக்க முயற்சி செய்தார்.

அவர் மீதமுள்ள மாணவர்களிடம், காலையில் சென்டரல் ஹைக்கு சில கட்டிடங்கள் தள்ளியிருக்கும் பகுதியில் சந்திப்பதாக கூறினார்.

அதன்பின் அவர்கள் ஒன்றாக இணைந்து பள்ளிக்குச் செல்வார்கள்.

புதன்கிழமை அன்று காலையில் ஒன்பது மாணவர்களில் ஏழு பேர் திட்டமிட்டபடி சந்தித்தனர்.

இரண்டு தேவாலயப் பாதிரியார்கள் அவர்களுக்கு முன்னால் நடந்து சென்றனர். அவர்களில் ஒருவர் கருப்பினத்தவர், இன்னொருவர் வெள்ளையினத்தவர்.

இரண்டு பாதிரியார்கள் அவர்களைப் பின்தொடர்ந்து வந்தனர்.





அந்த மாணவர்களின் அணி பள்ளியை நோக்கி செல்கையில், அங்கே ஒரு மக்கள் கூட்டத்தைக் கண்டனர்.

அந்த கூட்டத்தில் உள்ளவர்களின் முகங்கள் கோபத்தையும், வெறுப்பையும் எதிரொலித்தன.

கூட்டத்தில் இருந்த மக்கள் அவர்களைப் பார்த்து கத்தினர் மற்றும் அவர்களின் பெயர்களை அழைத்து கூச்சலிட்டனர், இருந்தும் மாணவர்கள் தொடர்ந்து முன்னால் நடந்தனர்.


மாணவர்கள் வீரர்களின் அருகில் சென்றபோது, அவர்கள் மாணவர்களை வீட்டிற்குத் திரும்பிச் செல்லுமாறு எச்சரித்தனர், மேலும் அவர்கள் மாணவர்கள் பள்ளிக்குள் செல்லமுடியாது எனக் கூறினர்.

வருத்தத்துடன் மாணவர்கள் திரும்பிச் சென்றனர்.

மெல்பா பாட்டிலோவால் இன்னமும் அனைவரும் கூடும் இடத்திற்கு வர இயலவில்லை,

அவளும், அவளது தாயும் வெறி கொண்ட வெள்ளையர்களால் துரத்தப்பட்டனர்.

எனவே அவர்களை தங்களது வீட்டிற்கேத் திரும்பிச் சென்றனர்.





எலிசபெத் எக்ஃபோர்டின் நிலைமை இன்னும் மோசமாக இருந்தது.

அவளுக்கு மற்றவர்களை எங்கே சந்திக்க வேண்டும் என்பது பற்றிய செய்தி இன்னும் கிடைத்திருக்கவில்லை.

தன் குடும்பத்தினருடன் பிரார்த்தனை செய்த பிறகு, அவள் பள்ளிக்குச் செல்வதற்காகத் தனியாகவே பேருந்தில் பயணம் செய்தாள்.

அவள் பேருந்திலிருந்து இறங்கியபோது, கோபமான வெள்ளையினக் கும்பலைத்தான் காணமுடிந்தது.

அப்போது அவள், பள்ளிக்கு அருகில் வீரர்கள் நிற்பதைக் கண்டாள்.

படைவீரர்கள் தன்னைப் பாதுகாப்பார்கள் என்று அவள் நினைத்தாள்.



எலிசபெத் வீரர்களை நோக்கி நடந்தபோது,

யாரோ அவள் ஆடையின் மீது மையைத் தெளித்தார்கள்.

ஒரு பெண் அவள் முகத்திற்கு நேராக உரக்கக் கத்தினாள்.

எலிசபெத் அந்தக் கோபமான குரல்களைப் புறக்கணிக்க முயன்றாள் .

அவள் தனது பயத்தை வெளியில் காட்டாமலிருக்க முயற்சி செய்தாள்.



இறுதியாக, அவள் வீரர்களை அடைந்தாள்.


வீரர்கள் அவளை முன்னே செல்ல அனுமதிப்பதற்குப்

பதிலாக, அவளது வழியை மறித்தனர்.

அவர்கள் அவளை நோக்கித் துப்பாக்கிகளை

நீட்டினார்கள்.

படைவீரர்கள் அவளுக்கு ஆதரவாக இல்லை.



அவளது கண்ணாடிக்குப் பின்னால், எலிசபெத்தின்

கண்கள் கண்ணீரால் நிரம்பின.

அவள் திரும்பி அங்கிருந்து நடந்து சென்றாள்.

கூட்டத்தில் இருந்தவர்கள் அவளருகே நெருக்கியடித்து

வந்தனர்.

யாரோ ஒருவன், "அவளைப் பிடியுங்கள்!" என்று

கத்தினான்.



எலிசபெத் சாலையில் சற்றுத் தள்ளி ஒரு பேருந்து நிறுத்தம் இருப்பதைக் கண்டாள். அவள் அங்கு சென்று ஒரு பெஞ்சில் அமர்ந்தாள்.

அவளருகில் ஒரு நல்ல குணமுடைய மனிதர் அமர்ந்து "நீ அழுமாறு அவர்களை பார்த்துவிடச் செய்யாதே," என்று அவளிடம் கிசுகிசுத்தான்.

பேருந்து வந்ததும்,
எலிசபெத்துக்கு உதவ ஒரு பெண்மணி முன்வந்தார்.

எலிசபெத்தின் தாய் பணிபுரியும் இடம் வரை, அந்தப் பெண்மணி அவளுடன் துணையாக பயணம் செய்தார்.



மூன்று வாரங்களாக, ராணுவ வீரர்களும் ஆத்திரமடைந்த கும்பலும் கறுப்பின மாணவர்களை சென்ட்ரல் உயர்நிலைப் பள்ளிக்குள் நுழைய விடாமல் தடுத்தனர்.

மாணவர்கள் தங்கள் பள்ளிப் பாடங்களை டெய்ஸி பேட்ஸின் வீட்டில் செய்ய வேண்டியிருந்தது.

அவர்களுக்கு இந்தப் பள்ளியை விட்டுவிட்டு பழைய பள்ளிகளுக்கே திரும்பிச் செல்வது எளிதான காரியம்.

ஆனால், தாங்கள் செய்வது சரியான காரியம் என அவர்களுக்குத் தெரிந்திருந்தது.


ஒரு நாள் வீரர்கள் அங்கிருந்து கிளம்பிச் சென்றனர்


"அடுத்து என்ன நடக்கும்?" என்று எலிசபெத் கேட்டாள்.

"பள்ளிக்குத் தயாராகுங்கள்" என்று திருமதி பேட்ஸ் கூறினார்.

வழக்கம் போலவே சென்ட்ரல் ஹை உயர்நிலைப் பள்ளியின் முன்னால் மக்கள் கும்பலாக நின்றிருந்தனர்.

காவலர்கள் கறுப்பின மாணவர்களை அந்தக் கும்பல் காணாதவாறு பக்க வாசல் வழியாக அழைத்துச் சென்றனர்.





பள்ளியின் உள்ளே. மாணவர்கள் தங்கள் வகுப்பறைகளைக் கண்டறிய பணியாளர்கள் உதவினர்.

தெல்மாவுக்கு உடல்நிலை சரியில்லை, ஒருவர் அவளை அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றார். இருப்பினும் அவள் வீட்டிற்குச் செல்ல விரும்பவில்லை.

அவள் பள்ளிக்குள் நுழைவதற்காக நீண்ட நேரம் காத்திருந்தாள்.

"நான் இம்முறை விட்டுவிட மாட்டேன்," என்று அவள் கூறினாள்.



கறுப்பின மாணவர்கள் உள்ளே நுழைந்துவிட்டார்கள் என்பதை அறிந்த கூட்டம் மிகுந்த கோபம் அடைந்தது.

அவர்கள் வெளியே இருந்த சில பத்திரிகையாளர்களைத் தாக்கினர்.

வகுப்பறையில் அமர்ந்திருந்த மாணவர்களால் பத்திரிகையாளர்களின் கூச்சல்களைக் கேட்க முடிந்தது.

மேலும் பலர் காயமடையக்கூடும் என்று தலைமைக் காவலர் அஞ்சினார். அவர் கறுப்பின மாணவர்களை வீட்டிற்குச் செல்லுமாறு கேட்டுக்கொண்டார்.

பள்ளிக்குக் கீழே இருந்த ஒரு வாகன நிறுத்துமிடத்தில், கறுப்பின மாணவர்கள் காவல்துறை வாகனங்களில் ஏறினர்.

"கீழே படுங்கள், மேலே எழுந்திருக்காதீர்கள்," என்று தலைமைக் காவலர் மாணவர்களிடம் கூறினார்.

"வழியில் எங்கும் நிறுத்தாதீர்கள்," என்று தலைமைக் காவலர் ஓட்டுநர்களிடம் கூறினார்.

வாகனங்கள் வேகமாகச் சென்றன.

கறுப்பின மாணவர்கள் சென்ட்ரல் உயர்நிலைப் பள்ளியில் சில மணிநேரம் இருந்தனர்.

ஆனால், அவர்கள் அங்கேயே இருக்க அனுமதிக்கப்படவில்லை.



நாடு முழுவதும் இருந்த செய்தி நிறுவனங்கள் லிட்டில் ராக்கில் நிகழ்ந்த இந்தச் சம்பவத்தைப் பற்றி விவாதித்தன.

நிறைய அமெரிக்கர்கள் இதுகுறித்து கோபம் கொண்டனர்.

அவர்கள், மாணவர்களைத் தங்கள் நகரங்களில் உள்ள பள்ளிகளில் வந்து பயிலுமாறு அழைப்பு விடுத்துக் கடிதங்களை அனுப்பினார்கள்.

அமெரிக்க அதிபர் டுவைட் ஐசன்ஹோவரும் கோபமடைந்தார்.

எந்தக் கும்பலாலும் அமெரிக்கக் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புவதைத் தடுக்க முடியாது என்று அவர் கூறினார்.

லிட்டில் ராக்கிற்கு அவர் ஒரு புதிய படைப்பிரிவை அனுப்பினார்.

அந்தப் படைப்பிரிவின் வேலையானது கருப்பின மாணவர்களை சென்டரல் ஹை பள்ளிக்குள் பாதுகாப்பாக அனுப்புவதாகும்.





அடுத்தநாள், அமெரிக்க இராணுவம் லிட்டில் ராக்கிற்கு வந்து சேர்ந்தது.

புதன்கிழமை அன்று காலையில், ராணுவ வீரர்கள் திருமதி பேட்ஸின் வீட்டுக் கதவைத் தட்டினார்கள்.

"நாங்கள் மாணவர்களுக்காகத் தயாராக இருக்கிறோம்," என்று அவர்கள் கூறினர்.

அன்று ஒன்பது மாணவர்களும் ராணுவ வாகனத்தில் பள்ளிக்குச் சென்றார்கள்.

ஹெலிகாப்டர்களிலும் வீரர்கள் ரோந்து சென்றனர்.

எங்கும் வீரர்கள் இருந்தனர்.


எர்னெஸ்ட், எலிசபெத் மற்றும் பிற மாணவர்களுடன் அவ்வீரர்கள் பள்ளிப் படிகளில் அணிவகுத்துச் சென்றனர்.

தான் ஒரு அமெரிக்கரைப் போல் உணர்ந்ததாக மின்ஜியான் கூறினாள்.

அது எனக்கு ‘ஒரு அபாரமான உணர்வை அளித்ததாக’ எர்னெஸ்ட் கூறினான்.

‘லிட்டில் ராக்கின் ஒன்பது நாயகர்கள்’ சென்ட்ரல் உயர்நிலைப் பள்ளியின் பிரதான வாயில்கள் வழியாக உள்ளே நுழைந்தனர்.

“அந்தத் தருணத்தில் முழு நாடும் மகத்தான ஓர் காலடியை முன்னோக்கி எடுத்துவைத்தது " என்று மெல்பா பின்னர் கூறினாள்.





முன் வரிசை: தெல்மா மதர்ஷெட் , எலிசபெத் எக்ஃபோர்ட் , மெல்பா பட்டிலோ.
பின் வரிசை: ஜெஃபர்சன் தாமஸ் , எர்னஸ்ட் கிரீன் , மின்னிஜீன் பிரவுன், கார்லோட்டா வால்ஸ் , டெரன்ஸ் ராபர்ட்ஸ் , குளோரியா ரே.

பின் குறிப்பு

படைவீரர்கள் சிறிது காலத்திற்கு லிட்டில் ராக்கின் ஒன்பது நாயகர்களுடன் அவர்களின் எல்லா வகுப்புகளுக்கும் உடன் சென்றனர். பெரும்பாலான வெள்ளையின மாணவர்கள் ஒன்று அவர்களிடம் பிரியமாக இருந்தனர் அல்லது அவர்களை பெரிதாக கண்டுகொள்ளாமல் இருந்தனர். ஆனால் இன்னமும் சிலர், கறுப்பின மாணவர்கள் அங்கு இருப்பதால் கோபமாக இருந்தனர், மேலும் அந்த வெள்ளையின மாணவர்கள் அவர்களை மிகவும் மோசமாக நடத்தினார்கள்.

சில மாதங்களுக்குப் பிறகு, பெரும்பாலான வீரர்கள் வெளியேறினர், அதன் பிறகு நிலைமை மேலும் மோசமடைந்தது. வெள்ளையின மாணவர்களில் பிரச்சினைகளை உண்டு பண்ணுபவர்களில் சிலர் கறுப்பின மாணவர்களின் பெயர்களை அழைத்து கேலி செய்தனர். மதிய உணவின்போது அவர்கள் மீது உணவை வீசினர். கறுப்பின மாணவர்கள் மீது பென்சில்களை எறிந்தனர். அவர்களை உதைத்து, அவர்களின் புத்தகங்களைக் கீழே தட்டிவிட்டனர்.

இறுதியாக, பட்டமளிப்பு நாள் வந்தது. சென்ட்ரல் உயர்நிலைப் பள்ளியில் பட்டம் பெற்ற முதல் கறுப்பின மாணவன் என்ற பெருமையை எர்னஸ்ட் கிரீன் பெற்றான். பின்னர் அவன் , “நான் இங்கு எதைச் செய்ய வந்நேனோ, அதை முழுமையாக செய்து முடித்துவிட்டேன் என்பது எனக்குத் தெரியும், நான் இங்கு வந்து ஒரு தடைச் சுவற்றை உடைத்தேன்," என்று கூறினான்.

அந்தச் சுவர்தான் பிரிவினைவாதத்தின் சுவர்; கறுப்பின மக்களையும் வெள்ளையின மக்களையும் பிரித்து வைத்திருந்த சுவர். கறுப்பின மற்றும் வெள்ளையினக் குழந்தைகள் ஒன்றாகப் பள்ளிக்குச் செல்ல முடியும் என்பதை காண்பிப்பதற்காக எர்னெஸ்ட் கிரீனும் மற்ற எட்டு மாணவர்களும் அந்த சுவற்றை உடைத்து தகர்க்க உதவினர்.

ஆனால் ஆளுநர் ஃபௌபஸ் அப்போதும் இது சரியான விஷயமல்ல என்று நினைத்தார். கறுப்பின மற்றும் வெள்ளையின மாணவர்கள் ஒன்றாகப் படிப்பதை அனுமதிப்பதற்குப் பதிலாக, அவர் 1958-59 கல்வியாண்டில் லிட்டில் ராக்கின் அனைத்து அரசு உயர்நிலைப் பள்ளிகளையும் மூடினார் . கறுப்பின மற்றும் வெள்ளையின மாணவர்கள் தங்கள் கல்வியைப் பெறுவதற்கு வேறு வழிகளைக் கண்டறிய வேண்டியிருந்தது. மெல்பா தனது பள்ளிப் படிப்பின் கடைசி ஆண்டைக் கலிஃபோர்னியாவில் கழித்தாள், மின்னிஜீன் நியூயார்க்கிற்குக் குடிபெயர்ந்தாள். 1959- ஆம் ஆண்டு இலையுதிர்காலத்தில் லிட்டில் ராக் பள்ளிகள் மீண்டும் திறக்கப்பட்டபோது, கார்லோட்டாவும், டெரன்ஸும் சென்ட்ரல் உயர்நிலைப் பள்ளிக்குத் திரும்பினர். மற்றவர்கள் தங்கள் பழைய பள்ளிகளுக்கே சென்றனர். அவர்கள் அனைவரும் பட்டம் பெற்று, கல்லூரிக்குப் பிறகு வெற்றிகரமான தொழில் வாழ்க்கையைத் தொடர்ந்தனர்.

1987- ல், 'லிட்டில் ராக்கின் ஒன்பது நாயகர்கள்' குழுவினர் மீண்டும் சென்ட்ரல் உயர்நிலைப் பள்ளிக்கு வருகை தந்தனர். இம்முறை, அவர்களை வரவேற்ற கூட்டம் அவர்களை நாயகர்களாகப் போற்றி ஆரவாரித்தது. மாணவர் சங்கத் தலைவர் ஒரு இளம் கறுப்பின இளைஞராக இருந்தார். லிட்டில் ராக்கின் மேயரும் ஒரு கறுப்பினப் பெண்ணாகவே இருந்தார்.

' லிட்டில் ராக்கின் ஒன்பது நாயகர்கள்' அந்தத் தடைச்சுவற்றை உடைக்க உதவினார்கள். இனி, மக்களைப் பிரித்து வைக்கும் எல்லாத் தடைகளையும் தொடர்ந்து உடைப்பது நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

முக்கியமான தேதிகள்

மே 17, 1954 – பிரிவினைப் பள்ளிகள் சட்டத்திற்குப் புறம்பானவை என உச்ச நீதிமன்றம் அறிவித்தது.

கோடைக்காலம் 1957 - சென்ட்ரல் உயர்நிலைப் பள்ளியில் சேர்வதற்காக, கறுப்பினத்தவர் மட்டுமே பயிலும் பள்ளிகளிலிருந்து பதினேழு மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆகஸ்ட் மாதத்திற்குள், அந்தப் பட்டியல் ஒன்பதாகக் குறைக்கப்பட்டது.

செப்டம்பர் 2 , 1957 (தொழிலாளர் தினம்) – ஆளுநர் ஃபௌபஸ் சென்ட்ரல் ஹை பள்ளியைச் சுற்றி படைகளை நிறுத்தினார்.

செப்டம்பர் 3 , 1957 – பள்ளியின் முதல் நாளில் கறுப்பின மாணவர்கள் வீட்டிலேயே இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டனர்.

செப்டம்பர் 4 , 1957 – சென்ட்ரல் உயர்நிலைப் பள்ளிக்குள் நுழைய முயன்ற கறுப்பின மாணவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்.

செப்டம்பர் 23 , 1957 – கறுப்பின மாணவர்கள் சென்ட்ரல் உயர்நிலைப் பள்ளிக்குள் பக்கவாட்டுக் கதவு வழியாக நுழைந்தனர், ஆனால் அவர்களின் பாதுகாப்பிற்கு அஞ்சிய காவல்துறை , அவர்களை வீட்டிற்கு அழைத்துச் சென்றது.

செப்டம்பர் 24 , 1957 – அமெரிக்க இராணுவப் படைகள் லிட்டில் ராக்கிற்கு வந்தன.

செப்டம்பர் 25 , 1957 – " லிட்டில் ராக்கின் ஒன்பது நாயகர்கள்" குழுவினர், அமெரிக்கப் படைகளுடன் சேர்ந்து சென்ட்ரல் உயர்நிலைப் பள்ளியின் பிரதான வாயில் வழியாக உள்ளே நுழைந்தனர்.

மே 27 , 1958— எர்னஸ்ட் கிரீன் சென்ட்ரல் உயர்நிலைப் பள்ளியிலிருந்து தேர்ச்சி பெற்று பட்டம் பெற்றான்.